**ஒன்பதாம் வகுப்பு**

- கல்வியில் பெரியவர் கம்பர்
- கம்பராமாயணம் 6 காண்டங்களையுடையது
- கம்பர் பிறந்த ஊர் தேரழுந்தூர்
- மொழிகள் பல தோன்றி வளர அடிப்படையான மொழியை மூல மொழி என்பர்
- இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை எனக் குறிப்பிட்டவர் அகத்தியலிங்கம்
- ஒரு மூல மொழ்யில் இருந்து தோன்றும் மொழியை கிளை மொழி என்பர்
- திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலை எழுதியவர் கால்டுவெல்
- தமிழில் உள்ள மிகப்பழமையான நூல் தொல்காப்பியம்
- அளபடை எனும் சொல்லுக்கு அளவு அதிகரித்தல் என்பது பொருள்
- அளபடை 3 வகைப்படும்
- செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் குறில் நெடில் ஆகி அளவெடுப்பது இன்னிசை அளபடை
- முதல் எழுத்துகளின் எண்ணிக்கை 30
- கழுத்தினின்று பிறப்பது இடையினம்
- வல்லின எழுத்துகளின் இடப்பிறப்பு மார்பு
- இரண்டு உதடுகள் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ப் , ம்
- பண்ணுக்கு அழகு கேட்போர் நன்றென்றல்
- பிறருக்கு இரந்து செல்லாமை காலுக்கு அழகு
- நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா – பாரதியார்
- துரியோதனின் தந்தை திருதராட்டிரன்
- காந்தியக் கவிஞர் நாமக்கல் கவி ஞர்
- உவமைக் கவிஞர் சுரதா
- புதுக்கவிதை வளர்ச்சியில் வல்லிக்கண்ணன் பங்கு போற்றத்தக்கது
- குறுந்தொகைப்பாடல்களின் எண்ணிக்கை 401
- குறுந்தொகையின் அடி வரையறை 4 முதல் 8
- திருவிளையாடல் புராணத்தை இயற்றியவர் பர ஞ்சோதி
- திருவிளையாடல் புராணத்தில் 3 காண்டங்கள் உள்ளன
- இறைவனிடம் பாடலைப் பெற்றுச் சென்றவன் தருமி
- பொற்கிழி பெறச்சென்ற தருமியைத் தடுத்தவன் நக்கீரன்
- உடல் முழுதும் கண்களை உடையவன் இந்திரன்
- மதுரைக் காண்டம் 18 படலம்
- கூடற் காண்டம் 30 படலம்
- திருவாலவாய்க் காண்டம் 16 படலம்
- திருவிளையாடல் புராணத்தில் 3363 விருத்தப்பாக்கள் உள்ளன.
- கடல் பயணத்தை முந்நீர் வழக்கமென குறிப்பிடும் நூல் தொல்காப்பியம்
- கடலில் செல்லும் பெரிய கப்பல் நாவாய் எனப்பட்ட்து
- காவிரிப்பூம்பட்டினத்தில் சுங்கச்சாலையும் கலங்கரை விளக்கும் இருந்தன.
- சேர நாட்டின் துறைமுகம் முசிறி
- சோழ நாட்டின் துறைமுகம் காவிரிப்பூம்பட்டினம்
- பாண்டிய நாட்டின் துறைமுகம் கொற்கை
- தொழிற்பெயரின் பகுதி திரிந்து வரும் பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர்
- காட்சி = காண் + சி
- மாட்சி என்பது பண்புப்பெயர்
- பகுதி மட்டும் தொழிலைக் குறிப்பது முதனிலை தொழிற்பெயர்
- வட்டம் என்பது வடிவப் பண்புப் பெயர்

Siva 8015118094

- நீ என்னும் முன்னிலை ஒருமைப்பெயர் வேற்றுமை உர்பேற்கும் போது நின் எனவும் , உன் எனவும் மாறும்
- ஓலைச்சீட்டில் செய்யுள் வடிவில் எழுதப்படும் கடித வகை சீட்டுக்கவி
- சீட்டுக்கவிக்கு ஓலைத்தூக்கு , ஓலைப்பாசுரம் எனும் வேறு பெயர்களும் உண்டு
- ஆன்ந்தரங்கர் பிறந்த ஊர் பெரம்பூர்
- ஆன்ந்தரங்கர் மொழிபெயர்ப்பாளராக பணியாற்றினார்
- ஆன்ந்தரங்கர் ஆசிரியர் பெயர் எம்பார்
- ஆன்ந்தரங்கர் தம் நாட்குறிப்பிற்கு இட்ட பெயர்கள் தினப்படி செய்திக்குறிப்பு , சொஸ்தலிகிதம்
- சேர மன்னரின் அடையாளம் – வில்
- சோழ மன்னன் புறாவைக் காக்க தன் தசையை அளித்தான்
- மார்போலையில் எழுதும் எழுத்தாணி தந்தம்
- தமிழில் தோன்றிய முதல் பரணி இலக்கியம் கலிங்கத்துப் பரணி
- கலிங்கத்துப் பரணியை இயற்றியவர் சயங்கொண்டார்
- நவ்வி என்பதன் பொருள் மான்
- சிற்றிலக்கியங்கள் 96 வகைப்படும்
- ஐக்கிய நாடுகளின் உறுப்புரிமை பெற்ற நாடுகளின் எண்ணிக்கை 192
- சாதுவன் கடல் வாணிகம் மேற்கொண்டான் என்னும் குறிப்பு மணிமேகலை நூலில் உள்ளது
- திரைகடல் ஓடியுன் திரவியம் தேடு எனக் கூறியவர் ஔவையார்
- தமிழர்கள் ஒப்பந்தக் கூலிகளாக ரியூனியன் தீவில் குடியமர்த்தப்பட்டார்கள்
- திருவிழாக்களில் காவடி எடுப்பதும் தேர் இழுப்பதும் இன்றும் நடைபெறுகிறது
- வழு 7 வகைப்படும்
- என் மாமா வந்தது என்பது திணை வழு
- இலக்கண முரையில்லாவிடினும் இலக்கணமுடையதாக ஏற்றுக்கொள்வது வழுவமைதி
- பசுவைப்பார்த்து என் லட்சுமி வந்தாள் என்பது திணை வழுவமைதி
- அன்பு செய்யின் அயலாரும் அண்டி நெருங்கும் உறவினராம்
- துன்ப நோயை நீக்கிடுமேல் துவ்வா விடமும் அமுதமாகும்
- ஏழையாகி எளியவரின் எளியன் ஆக வேண்டுமடா
- அடிப்படைத்தேவைகளுள் முதன்மையானது உணவு
- பசிப்பிணிக்கு உணவே மருந்து
- நோய்க்கு முதல் காரணம் உப்பு
- மீதூன் விரும்பேல் எனக் கூரியவர் ஔவையார்
- பொருள்கோல் 8 வகைப்படும்
- ஊ ஞ்சல் கயிறு போல் முன் பின்னாகப் பொருள் கொள்வது தாப்பிசை பொருள்கோள்
- பொருளுக்கேற்பச் சொற்களைக் கூட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோள்
- செய்யுள் அடிகளை முன் பின்னாக மாற்றினாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது அடிமறிமாற்றுப் பொருள்கோள்
- குழந்தையின் தளிர்க்கை பட்ட கூழினை உண்பது இன்பம்
- கற்றவர் முன் தாம் கற்ற கல்வியைக்கூறல் இன்பம்
- வெற்றியை வாழ்வில் சேர்க்கும் வினை பல புரிதல் இன்பம்
- சிற்றினக் கயவரோடு சேராது வாழ்தல் இன்பம்
- காமராசர் தன் பேச்சாற்றலை வளர்த்துக்கொண்ட இடம் மெய்கண்டான் புத்தகச்சாலை
- காமராசர் ஆட்சிக்காலத்தில் கல்வி அமைச்சர் சி.சுப்பிரமணியம்
- காமராசருக்கு நடுவணரசு பாரத ரத்னா விருது அளித்தது

- காமராசர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக்க் கொண்டாடுகிறோம்
- காமராசர் முதல்வராக பதவியேற்ற ஆண்டு 1954
- மீனவர்களுக்கு இரவில் விளக்காக விளங்குவது விடிவெள்ளி
- மீன்வலை மீனவரின் படிக்கும் நூல்
- மீனவர் கண்ணாடியாகப் பயன்படுத்துவது முழு நிலவு
- மீனவர் வாழும் வீடு கட்டு மரம்
- கிறித்தவக் கம்பர் எச்.ஏ. கிருட்டினனார்
- இரட்சணிய யாத்திரிகம் பில்கிரிம்ஸ் புரோகிரஸ் நூலைத் தழுவி இயற்றப்பட்டது
- தொடை 8 வகைப்படும்
- இசையால் தாக்குறும் துன்பம் யாவும் மறைந்து போகும்
- உலக நிகழ்வுகளை அறிந்தால் அறிவுத்திறன் மேம்படும்
- ஏட்டுக் கல்வியறிவுடன் கலையறிவு, தொழிற்கல்வி அறிவும் தேவை
- பள்ளிப் பறவைகள் நூல் 3 பிரிவுகளாக அமைந்துள்ளது
- தேட்டை என்பதன் பொருள் செல்வம்
- ஏர் பிடித்து உழைப்பவருக்கு கிடைப்பது எதிர்காலம்
- அறச்சாலை அருள் விதைப்பவருக்கே கிடைக்கும்
- முதன் முதலில் உயிர்கள் நீரில் தோன்றின
- மனிதன் உயிரங்குன்றின் மணி முடியாகத்திகழ்கிறான்
- மழை வளம் பெருக மரம் வளர்த்தல் வேண்டும்
- கதிரவனிடமிருந்து வெளி வரும் புற ஊதாக்கதிர்களைத் தடுப்பது ஓசோன் படலம் ( உயிர் வளிப்படலம்)
- உலகில் இல்லாத பொருளை உவமித்துக்கூறுவது இல்பொருள் உவமை அணி
- ஒரு பகுதியை மட்டும் உருவகம் செய்வது ஏகதேச உருவக அணி

## திராவிட மொழிகள்

இந்தியாவில் 12 மொழிக்குடும்பங்கள் உள்ளன . 325 மொழிகள் பேசப்படுகின்றன – இந்திய மானிடவியல் கனக்கெடுப்பு

- இந்தியாவில் பேசப்படும் மொழிகள் அனைத்தையும் இந்தோ- ஆசிய மொழிகள் , திராவிட மொழிகள், ஆஸ்திரா ஆசிய மொழிகள் , சீன – திபெத்திய மொழிகள் என 4 மொழிக்குடும்பத்தில் அடங்கும்
- 23 க்கும் மேற்பட்ட திராவிட மொழிகள் உள்ளன.
- திராவிட மொழிகளை தென் திராவிட மொழிகள் , நடுத்திராவிட மொழிகள் , வட திராவிட மொழிகள் என மூன்றாகப் பிரிப்பர்
- தமிழ் , தெலுங்கு , மலையாளம் , கன்னடம் ஆகிய நான்கும் திராவிடப் பெருமொழிகள்
- பழமையான நாகரிகம் திராவிட நாகரிகம்
- குமாரில பட்டர் என்பவர் முதலில் திராவிடம் எனும் சொல்லை உருவாக்கினார்
- இலெமூரியாக் கண்டம் – கடல் கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ்க் குமரிக்கண்டம்
- திராவிட எனும் சொல் தமிழ் எனும் சொல்லில் இருந்தே உருவானது – ஈராஸ் பாதிரியார்
- தமிழ் செவ்வியல் மொழி
- 12 உயிர் எழுத்துகளும் இடையின எழுத்துகளும் கழுத்திலிருந்து பிறக்கின்றன
- மெல்லின எழுத்துகள் மூக்கிலிருந்து பிறக்கின்றன
- வல்லின எழுத்துகள் மார்பிலிருந்து பிறக்கின்றன
- அளபடை 2 வகைப்படும் . உயிரளபடை , ஒற்றளபடை
- உயிரளபடை 3 வகைப்படும் . செய்யுளிசை அளபடை, இன்னிசை அளபடை, சொல்லிசை அளபடை

**இக்காலக் கவிதைகள்**

- 20 ஆம் நூற்றாண்டு – உரை நடைக்காலம்
- முப்பது கோடி முகமுடையாள் ---- பாரதியார்
- எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்---- பாரதிதாசன்
- மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் ---- கவிமணி
- தமிழன் என்றோர் இனமுண்டு ---- நாமக்கல் கவி ஞர்
- கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் ---- நாமக்கல் கவி ஞர்
- அமெரிக்க கவி ஞர் வால்விட்மனின் சாயலில் பாரதியார் வசன கவிதை எழுதினார்.
- மணிக்கொடி இதழில் ந.பிச்சமூர்த்தி,புதுமைப்பித்தன் , கு.ப.இராசகோபாலன் , க. நா. சுப்பிரமணியன் கவிதை எழுதினர்
- எழுத்து இதழில் எஸ் வைத்தீஸ்வரன் , தருமு.சிவராமு , மணி, சி.சு செல்லப்பா முதலியோர் எழுதினர்
- கோவை வானம்பாடிக் குழுவினர் புதுக்கவிதையை பரவலாக்கப் பாடுபட்டனர்

**கண்ணதாசனின் கவி இன்பம்**

- ஆட்டனத்தி, ஆதி மந்தி, மாங்கனி, கல்லக்குடி மகாவியம் ,இயேசு காவியம் படைத்தவர் கண்ணதாசன்
- கம்பர் – அம்பிகாபதி வரலாற்றை அடிப்படையாக்க் கொண்ட இனிய நாடகம் இராச தண்டணை – கண்ணதாசன்
- ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி , வேலங்குடித்திருவிழா , சேரமான் காதலி – புதினங்கள்— கண்ணதாசன்
- சேரமான் காதலி சாகித்திய அகாதமியின் பரிசு பெற்றது
- தென்றல் , முல்லை , கண்ணதாசன் , தமிழ் மலர் போன்ற இதழ்களை நட்த்தியவர் கண்ணதாசன்
- சிறந்த இலக்கியத்திற்கு நடுவணரசு சாகித்திய விருது வழங்குகிறது

- ஆகு பெயர் 16 வகைப்படும்

**கடற்பயணம்**

- திரைகடல் ஓடியும் திரவியம் தேடு – ஔவையார்
- யாதும் ஊரே யாவரும் கேளிர் – கணியன் பூங்குன்றனார்
- பொருளீட்டுதலை தொல்காப்பியம் பொருள்வயிற் பிரிவு என்கிறது
- ஆழி , ஆர்கலி , முந்நீர் , வாரணம் பௌவம் பரவை புணரி என்பன கடலைக் குறிக்கும் சொற்கள்.
- மரக்கலம்,கப்பல்,கலம்,கட்டுமரம், நாவாய்,புடகு,பரிசில், புணை, தோணி, தெப்பம் . திமில் , அம்பி , வங்கம், மிதவை, பஃறி ,ஓடம் என்பன கலத்தைக் குறிப்பன
- மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம் --- பாரதியார்
- வெனிசு நாட்டறி ஞர் – மார்க்கோபோலோ
- அதியமானின் முன்னோர் காலத்தில் கரும்பு சீனாவில் இருந்து கொண்டு வந்து பயிரிடப்பட்டது

**கெலன் கெல்லர்**

- கெலன் கெல்லர் அமெரிக்காவின் எழுத்தாளர்
- உலகத்தில் அமைதி மலரவேண்டும் என விரும்பிபார் கெலன் கெல்லர்
- கெலன் கெல்லர் 19 மாதக் குழந்தையாக இருந்தபோது ஏற்பட்ட நோயால் கண் பார்வை பறி போனது ,காது கேளாமை , வாய் பேசாமை ஏற்பட்டது

siva 8015118094

- 6 வயதில் அலெக்ஸாண்டர் கிரகாம் பெல் உதவியால் பெர்கின்ஸ் பள்ளியில்( அமெரிக்கா – பாஸ்டன் நகர்) சேர்ந்தார்
- அன்னிசல்லிவான் என்பவர் கெலன் கெல்லரின் ஆசிரியர்
- பாஸ்டனில் உள்ள ஹோரஸ்மான் காது கேளாத பள்ளியிலும் நியூயார்க்கில் உள்ள ரைட் ஹூமாசன் பள்ளியிலும் பயின்றார்
- கெலன் கெல்லர் ப்ரெய்லி முறையில் எழுதவும் படிக்கவும் கற்றார்
- கேம்பிரிட்ஜ் ரெட் கிளிஃப் கல்லூரியில் பட்டம் பெற்றார் .
- கெலன் கெல்லர் நிதி என ஒன்றைத்தொடங்கி அதில் சேர்ந்த ஒன்றரைக்கோடியை காது கேளாத , கண்ணிழந்தவர்களுக்கான பள்ளிக்கு வழங்கினார்.
- பார்வையற்றோருக்கு என தேசிய நூலகம் ஒன்றை உருவாக்கினார்
- வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை ஒன்று போனால் இன்னொன்று வரும் அந்த நம்பிக்கைஇருந்தால் வாழ்க்கை வெறுமை ஆகாது --- கெலன்
- விக்டோரியா மகாராணியிடம் தான் சாதிக்க காரணம் என்னுடைய ஆசிரியர் அன்னி என்றார் கெலன் கெல்லர்
- ஆசிரியர் அன்னி 1930 ல் இறக்க தனது உதவியாளர் பாலி தாம்சன் உதவியுடன் வாழ்ந்தார் .
- வாஷிங்டன் நகரின் புகழ் பெற்ற பெண்மணி ஆனார்
- 1880 ஜூன் 27 ல் அமெரிக்கா அலபாமா மாகாணத்தில் துஸ்கும்பியாவில் பிறந்து சாதனையாளராக திகழ்ந்த கெலன் 1968 ஜூன் 1 ல் இறந்தார் அவரது உடல் அன்னி , பாலி உடல்களுக்கி இடையே அடக்கம் செய்யப்பட்டது
- 3 நாட்கள் மட்டுமே பார்வை கிட்டியதாக ஒரு நாள் இரவு கனவு கண்டார் கெலன் கெல்லர்
- இரண்டாம் நாள் லியனார் டோ டாவின்ஸி யின் ஓவியத்தையும் செகப்பிரியருடைய நாடகத்தையும் கெலன் கெல்லர் பார்த்தார்
- எட்டாவது அதிசியம் கெலன் கெல்லர்

**உணவே மருந்து**

- உண்டி முதற்றே அழகு
- பசியின் கொடுமையை பசிப்பிணி என்னும் பாவி என்கிறது மணிமேகலைக் காப்பியம்
- உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே – புற நானூறு , மணிமேகலை
- உண்ட உணவு செரித்த பின் உணவு உண்ண வேண்டும்
- நம்து நாட்டுக்கு ஏற்றது புழுங்கலரிசி
- ம ஞ்சள் – சளியைப் போக்கும்
- கொத்துமல்லி – பித்தத்தை நீக்கும்
- சீரகம் – வயிற்றுச் சூட்டைப் போக்கும்
- மிளகு – தொண்டைக்கட்டை நீக்கும்
- பூண்டு – வளியகற்றி , வயிற்றுப்பொருமலை நீக்கி பசியை மிகுக்கும்
- வெங்காயம் – குளிர்ச்சி
- பெருங்காயம் – வளியகற்றி
- இ ஞ்சி – பித்தம் , காய்ச்சல்
- தேங்காய் – நீர்க்கோவையை நீக்கும்
- கறிவேப்பிலை – மணம் ஊட்டி, உணவு விருப்பு
- நல்லெண்ணெய் - கண் குளிர்ச்சி
- சீரகம் பூண்டு கலந்த மிளகு நீர் – செரிமானம் , உட லுக்கு வலுவூட்டி
- நோய்க்கு காரணம் உப்பு
- நீரின்றி அமையாது உலகு
- ஒரு நாளைக்கு 3 லிட்டர் நீர் அவசியம்

siva 8015118094

- புரதம் , கொழுப்பு, மாச்சத்து , கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துக்கள் --- சமச்சீர் உணவு
- மீதூண் விரும்பேல் --- ஔவையார்
- காலை மாலை உலாவி நிதம் காற்று வாங்கி வருவோரின் காலைத் தொட்டுக் கும்பிட்டுக் காலன் ஓடிப்போவானே --- கவிமணி
- உடம்பார் அழியின் உயிரார் அழிவர் .... உடம்பை வளர்த்தேனே உயிர் வளர்த்தேனே – திருமூலர்
- அறு சுவையின் பயன் கள்
  இனிப்பு – வளம்
  துவர்ப்பு – ஆற்றல்
  கைப்பு – மென்மை
  கார்ப்பு – உணர்வு
  உவர்ப்பு – தெளிவு
  புளிப்பு – இன்மை
- மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு என்றவர் --- வள்ளுவர்

**நோய் தீர்க்கும் மூலிகைகள்**

- துளசி – மார்புச் சளி , நீர்க்கோவை , தலைவலி நீங்கும்
- துளசி + எலுமிச்சை சாறு – படை நீங்கும்
- துளசி விதை – உடற்சூடு , நீர் எரிச்சல் நீங்கும்
- கீழ்க்காய் நெல்லி , கீழா நெல்லி , கீழ்வாய் நெல்லி – மஞ்சட்காமாலை
- கீழா நெல்லி + கற்கண்டு – சிறு நீர் தொடர்பான நோய்
- தூதுவளை , தூதுளை , சிங்கவல்லி – சுவாசகாசம் போகும் , இளைப்பு இருமல் போகும்
- தூதுவளையை ஞானப்பச்சிலை என்றார் வள்ளலார்
- குப்பை மேனி – நச்சுக் கடிகளுக்கு மருந்து , படுக்கைப்புண் , மலப்புழுக்கள்
- குப்பைமேனி + மஞ்சள் + உப்பு – சொறி , சிரங்கு நீங்கும்
- மேனி துலங்க குப்பை மேனி என்பது பழமொழி
- சோற்றுக்கற்றாழை + நல்ல எண்ணெய் = தலை முடி வளர
- சோற்றுக்கற்றாழை +பசும் பால் – மூலச்சூடு நீங்க
- சோற்றுக்கற்றாழை +மஞ்சள் – காயம் பட்ட இடத்தில் தடவ
- சோற்றுக்கற்றாழைக்கு குமரி என்று பெயர்
- கர்ப்பப்பை நோய்களை நீக்க சோற்றுக்கற்றாழை பயன்படும் . குமரி கண்ட நோய்க்கு குமரி கொடு என்பர்
- எலும்பு கூட முருங்கைப்பட்டையை அரைத்து தடவவேண்டும்
- முருங்கைக்கீரை – கண் பார்வைக்கு
- கறிவேப்பிலை - - நச்சுத்தன்மையை நீக்கும் , சீதபேதியை குணமாக்கும்
- கரிசலாங்கண்ணி – வேறு பெயர் கரிசாலை ,கையாந்தகரை , பிருங்கராசம் , தேகராசம்
- கரிசலாங்கண்ணி – நரையைப்போக்கும் , இரத்தசோகை , செரிமானக்கோளாறு நீங்க
- மணித்தக்காளி – வாய்ப்புண் , குடற்புண்
- முசு முசுக்கை – இருமல் நீங்க
- வல்லாரை – நினைவாற்றல் பெருக
- வேப்பங்கொழுந்து – மார்புச்சளி நீங்கும்
- வேப்பிலை – அம்மைக்கு

**காமராசர்**

- கர்ம வீரர் , தன்னலமற்ற தலைவர் கல்விகண் திறந்தவர் , ஏழைப்பங்காளர் – காமராசர்
- விருது நகரில் குமாரசாமி , சிவகாமி க்கு மகனாக காமராசர் பிறந்தார்



siva 8015118094

- சூலை 15 1903 பிறந்த தேதி
- காமராசரின் தாத்தா – நாட்டாண்மை
- காமராசர் 7 வயதில் வந்தே மாதரம் சுவரொட்டியைக் கண்டார்
- காமராசர் 12 வயதில் பள்ளிப் படிப்பை கைவிட்டார்
- மெய்கண்டான் புத்தகசாலைக்கு சென்று லெனின் கரிபால்டி நெப்போலியன் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றை காமராசர் படித்தார்
- காங்கிரஸ் கட்சியின் தலைவர் சத்தியமூர்த்தியை அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்.
- காமராசர் 1937 ல் சட்டமன்ற உறுப்பினர்
- 1939 ல் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் 12 ஆண்டுகள் பணி
- 1945 ல் பிரகாசம் , 1947 ல் ஓமத்தூர் ராமசாமி , 1949 ல் குமாரசாமி ஆகியோர் முதல்வராக காரணமாக இருந்தவர் காமராசர்
- காமராசர் தலைவர்களை உருவாக்குபவர் என அழைக்கப்பட்டார்
- 1954 – 1963 வரை முதல்வராக காமராசர் விளங்கினார்
- காமராசர் ஆட்சிக் காலத்தில் தொழில் அமைச்சர் ஆர் வெங்கட்ராமன்
- காமராசர் ஆட்சியில் கூட்டுறவு இயக்கம் வேர் ஊன்றியது
- கட்டாயக் கல்வி , ஊர் தோறும் உயர் நிலைப் பள்ளி , தெருதோறும் தொடக்கப்பள்ளி , மதிய உணவுத்திட்டம் , பள்ளி வேலை நாட்கள் 180 லிருந்து 200 நாட்கள் --- காமராசர் திட்டங்கள்
- காமராசர் 2 ஆண்டில் 133 மா நாடுகள் கூட்டினார்
- காமராசர் த ஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை திருத்தி சாகுபடி செய்யும் தொழிலாளர்களுக்கு 60 % பங்கு கிடைக்கச் செய்தார்
- நில சீர் திருத்தம் கொண்டுவரப்பட்டு உச்ச வரம்பு 30 ஏக்கர் என குறைக்கப்பட்டது
- அமைச்சர் பதவியில் இருந்து விலகி கட்சி பணி செய்வதை காமராசர் திட்டம் என்றனர் . காமராசர் , மொராஜி தேசாய் லால் பகதூர் சாஸ்திரி போன்றோர் பதவியிலிருந்து விலகி கட்சிப் பணி செய்தனர்
- 1963 ல் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவி
- 1964 ல் நேருவின் மறைவுக்குப் பின் லால் பதூர் சாஸ்திரியை போட்டியின்றி பிரதமராக வழி வகையை காமராசர் செய்தார் சாஸ்திரி இறக்கவே இந்திராவை பிரதமராக்கினார்
- நடுவணரசு பாரத ரத்னா விருதை காமராசருக்கு வழங்கியது
- நாடாளுமன்றத்தில் ஆளுயர வெண்கலச் சிலை காமராசருக்கு உள்ளது
- மதுரையில் இவர் பெயரில் பல்கலைக் கழகம் உள்ளது
- கன்னியாகுமரியில் காமராசருக்கு மணி மண்டபம் , மெரினா கடற்கரை சாலையில் சிலையும் உள்ளது
- தேனாம்பேட்டையில் காமராசர் அரங்கம் உள்ளது .
- ஜுலை 15 ஐ கல்வி வளர்ச்சி நாளாக அரசு அறிவித்துள்ளது
- 1975 அக்டோபர் 2 ல் காந்தி பிறந்த நாளில் காமராசர் இறந்தார்
- காமராசர் நினைவு இல்லம் சென்னை , விருது நகர்
- 1962 சீன படையெடுப்பு
- நெய்வேலி நிலக்கரி சுரங்கம் , இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை , கிண்டி அறுவை சிகிச்சைக் கருவித் தொழிற்சாலை , பெரம்பூர் தொடர் வண்டி பெட்டித்தொழிற்சாலை , மேட்டூர் காகித தொழிற்சாலை போன்றவை காமராசர் காலத்தில் தொடங்கப்பட்டன
- 2 , 3 ஆவது ஐந்தாண்டு திட்டங்கள் காமராசர் காலத்தில் நிறைவேற்றப்பட்டன

**தில்லையாடி வள்ளியம்மை**

- பெற்றோர் முனுசாமி( புதுச்சேரி) – மங்களம் ( தில்லையாடி)

siva8015118094

- தில்லையாடி வள்ளியம்மை தென் ஆப்பிரிக்காவில் 1898 ல் பிறந்தார்
- காந்தியடிகளின் உரிமை முழக்கத்தினால் கவரப்பட்ட தில்லையாடி வள்ளியம்மை 1913 டிசம்பர் 23 ல் வால்க்ஸ்ரஸ்ட் எனுமிடத்தில் நடைபெற்ற அறப்போராட்டத்தில் கைது செய்யப்பட்டார் .
- இந்தியர்களின் நலனுக்காக எத்தகு இன்னல்களையும் ஏற்பேன், என் இன்னுயிரையும் ஏற்பென் என்றவர் தில்லையாடி வள்ளியம்மை
- 1914 பிப்ரவரி 22 ல் தனது 16 வயதில் தில்லையாடி வள்ளியம்மை இறந்தார்
- எனது சகோதரியின் மரணத்தை விட வள்ளியம்மையின் மரணம் எனக்கு பேரிடி என்றவர் காந்தியடிகள்
- நம்பிக்கை தான் தில்லையாடி வள்ளியம்மையின் ஆயுதம் என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து இந்தியன் ஒப்பீனியன் இதழில் காந்தி எழுதியுள்ளார்
- தென்னாப்பிரிக்க வரலாற்றில் தில்லையாடி வள்ளியம்மை பெயர் நிலைத்து நிற்கும் என்று தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகம் எனும் நூலில் காந்தி குறிப்பிட்டுள்ளார்
- நடுவணரசு அஞ்சல் தலை , அஞ்சல் உறை என தில்லையாடி வள்ளியம்மை நினைவாக வெளியிட்டுள்ளது
- தில்லையாடி – நாகப்பட்டணம் மாவட்டம் திருக்கடையூருக்கு தெற்கே 3 கி.மீ தொலைவில் உள்ளது
- சென்னை வண்டலூர் உயிரியல் பூங்காவில் பிறந்த பெண் புலிக்கு வள்ளி என தில்லையாடி வள்ளியம்மை நினைவாக பெயர் வைக்கப்பட்டுள்ளது
- காந்தியடிகள் தமிழ் மீது , தமிழர் மீது ஈடுபாடு கொள்ள தில்லையாடி வள்ளியம்மை ஓர் காரணம்
- காந்தியடிகள் மகாத்மா ஆக தில்லையாடி வள்ளியம்மை ஓர் காரணம்
- தில்லையாடியில் தில்லையாடி வள்ளியம்மைக்கு உருவச்சிலை உள்ளது
- கோ – ஆப் – டெக்ஸ்( தமிழ் நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ) தனது 600 ஆவது விற்பனை மையத்திற்கு( சென்னையில் உள்ள) தில்லையாடி வள்ளியம்மை மாளிகை என பெயர் சூட்டியுள்ளது.

Siva 8015118094

**பொங்கல்**

- பழையன கழிதலும் புதியன புகுதலும் வழு வல கால வகையினாலே – போகி
- காயுடை நெல்லோடு கரும்பு அமைத்துக் கட்டி அரிசி அவல் அமைத்து வாயுடை மறையர் மந்திரத்தால் வணங்குகிறேன் --- ஆண்டாள்
- பாலைப் பொழிந்து தரும் பாப்பா அந்தப் பசு மிக நல்லதடி பாப்பா – பாரதியார்
- சுழ்ன்றும் ஏர்ப்பின்னது உலகம் – வள்ளுவர்
- மதுரை , இராம நாதபுரம் , சிவ கங்கை மாவட்டங்களில் மஞ்சு விரட்டு , சல்லிக்கட்டு எனவும் வட மாவட்டங்களில் எருது கட்டு எனவும் எருது விடும் திருவிழா அழைக்கப்படுகிறது
- தமிழர் இதனை ஏறு தழுவுதல் என்பர்
- ஆந்திரா , கரு நாடகா ஆகிய மாநிலங்களில் பொங்கல் மகர சங்கராந்தி எனவும் ஜப்பான் , ஜாவா முதலிய நாடுகளில் அறுவடைத்திருவிழ எனவும் அழைக்கப்படுகிரது
- இலங்கை, மலேசியா , மொரீசியா, சிங்கப்பூர் , இங்கிலாந்து , அமெரிக்கா போன்ற கடல் கடந்த நாடுகளிலும் பொங்கல் கொண்டாடப் படுகிறது

**உயிர்க்கோளம்**

- நிலத்தை உயிர்க்கோளம் என்கிறோம்
- மனிதன் உயிரினக் குன்றின் மணி முடியாக உள்ளான்
- மனிதன் உயிர்க்கோளத்தின் மையம்

- அன்றிருந்த பூம்புகாரும் , தனுஷ் கோடியும் கடலில் மறைந்துவிட்டன . எஞ்சியது கடற்கரைக்கோவில் மாமல்லபுரம்
- நிலத்தில் முக்கால் பங்கு கடல் நீர் சூழ்ந்துள்ளது .
- வளம் குன்றாத மீன் துறை கடல்
- உப்பு , தாதுப் பொருள் , முத்து , பவளம் , கிளிஞ்சல் , கடற்பஞ்சு , சங்கு முதலியன கடலில் உள்ளன.
- நீர்ப்பாகம் – நீர்க்கோளம்
- காற்று மண்டலம் – வளிக்கோளம்
- காற்று மண்டலத்தில் ஆக்சிஜன்( உயிர் வளி ) 21 % நைட்ரஜன்( உப்பு வளி) 78 % மற்றவை 1 % உள்ளன
- வளிக்கோளம் அடி வளி மண்டலம் , மேல்வளி மண்டலம் என 2 ஆக பிரிக்கப்பட்டுள்ளன
- அடி வளி மண்டலம் நிலத்தின் வெப்ப நிலையை சீராக , புவிக்கு வரும் வெப்பத்தை சீர் செய்து அனுப்ப பசுமைக் கூண்டு போல் செயல்படுகிறது.
- மேல்வளி மண்டலத்தில் உள்ள உயிர்வளிப்படலம் ( ஓசோன் ) சூரியனிடமிருந்து வரும் புற ஊதாக் கதிர்களைத் தடுக்கிறது
- குளிர்பதனப் பெட்டியில் உள்ள குளோரோ ஃபுளோரோ கார்பன் ஓசோன் படலத்தைப் பாதிப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது

**திரு.வி.கலியாண சுந்தரனார்**

- தமிழ்த்தென்றல்
- பிறந்த ஊர் : துள்ளம் ( சென்னை )
- பெற்றோர் : விருத்தாசலனார் – சின்னம்மை
- கதிரைவேலர் என்பாரிடம் தமிழ் பயின்றார்
- வடமொழிச் சொற்கள் கலவாமல் தமிழைப் பயன்படுத்தினார்
- தமிழை வளர்க்க வேண்டும் என்றால் பிற மொழியை வெறுக்க வேண்டும் என்பது பொருளன்று – திரு.வி.க
- காந்தியடிகளின் மேடைப்பேச்சை தமிழில் மொழிப்பெயர்த்தவர் திரு.வி.க
- தமிழ்த்தாயைப் புதுப் போர்வையில் ஒப்பனை செய்து அரியாசனத்தமர்த்த சூள் கொண்டெழுங்கள் பழந்தமிழ் வீரத்துடன் எழுங்கள் என இளைஞர்களுக்கு அறை கூவல் விடுபவர் திரு.வி.க
- கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் விரும்பும் வண்ணம் பேசுபவர் திரு.வி.க
- அறி ஞர் அண்ணாவைக் கவர்ந்தவர் திரு.வி.க
- திரு.வி.க விற்கு வாய்த்த மொழி நடை மலை எனத் தமிழ் உலகில் ஓங்கி உயர்ந்துள்ளது என்றவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்
- திரு.வி.க வின் நூல்கள் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ,பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம் ,இமயமலை அல்லது தியானம்,
- திரு.வி.க வின் உரை நடை நூலகள் :முருகன் அல்லது அழகு , சைவத்திறவு, சைவத்தின் சமரசம் , கடவுட் சாட்சியும் தாயுமானவரும், ராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் தமிழ நாடும் நம்மாழ்வாரும் , நாயன்மார் வரலாறு , தமிழ் நூலகளில் பௌத்தம் , காதலா , முடியா சீர்திருத்தமா , என் கடன் பணி செய்து கிடப்பதே , இந்தியாவும் விடுதலையும் , தமிழ்ச்சோலை , உள்ளொளி
- திரு.வி.க வின் செய்யுள் நூல்கள் முருகன் அருள் வேட்டல் , திருமால் அருள்வேட்டல் , கிறித்துவின் அருள்வேட்டல் , அருகன் அருகே , உரிமை வேட்டல் , பொதுமை வேட்டல் , பொருளும் அருளும் அல்லது மார்க்கீசியமும் காந்தியமும்
- திரு.வி.க வின் இதழ்ப்பணி : தேச பக்தன் , நவ சக்தி இதழில் தொழிலாளர் நலனுக்காக பாடுபட்டார்

Siva 8015118094

- 70 வயதில் படுக்கையில் இருந்த போதும் வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல் எனும் நூலை மு.வரததாசன் உதவியுடன் வெளியிட்டார்
- மனைவி கமலாம்பிகை உடன் 6 ஆண்டுகளே வாழ்ந்தார் . மனைவியை இழந்ததும் தமிழுடன் வாழ்கிறேன் என்றார்
- 1953 செப்டம்பர் 17 ல் 71 வயதில் திரு.வி.க வின் உயிர் பிரிந்தது
- பேசுந்தாய்மொழியின் மாட்டு அன்பில்லா ஒருவன் தாயையும் நாட்டையும் பழித்தவனாவன் – திரு.வி.க

## உலகளாவிய தமிழர்

- கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி – புறப்பொருள் வெண்பா மாலை
- குமரிக்கண்டத்தில் தமிழினம் தோன்றியது.
- 154 நாடுகளில் தமிழ் பரவியுள்ளது
- திரைகடல் ஓடியும் திரவியம் தேடு – ஔவையார்
- சாதுவன் கடல் கடந்து வாணிகம் செய்த குறிப்பு மணிமேகலையில் உள்ளது
- ரியூனியன் தீவில்( பிரான்ஸ்) தமிழர்கள் உள்ளனர் . அவர்கள் பிரெஞ்சுக்காரர்களால் புதுச்சேரி காரைக்கால் பகுதிகளில் இருந்து ஒப்பந்தக் கூலிகளாக பணி அமர்த்தப்பட்டனர். இங்குள்ள தமிழர்கள் பிரெஞ்சு மொழியே பேசுகின்றனர்.
- சிங்கப்பூர் , மலேசியா , பிஜித்தீவுகள் தென் அமெரிக்கா , கனடா , பிரிட்டன் ஆகிய நாடுகளில் தமிழ் ஒரு பாடமாக உள்ளது
- இலங்கை , சிங்கப்பூர் , மலேசியா வில் தமிழ் ஆட்சி மொழி
- யாதும் ஊரே யாவரும் கேளிர் – கணியன் பூங்குன்றனார்.
- சிங்கப்பூர் , மொரிசியசு நாடுகளில் குடியரசுத்தலைவர்களாகவும் தமிழர்கள் உள்ளனர்
- இலங்கை , சிங்கப்பூர் , மலேசியா வில் தமிழர்கள் சிலர் ஆட்சிப் பொறுப்பில் உள்ளனர்

## ஆனந்த ரங்கர் நாட்குறிப்பு

- ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு அக்கால நிகழ்வுகளை தெளிவாக எடுத்துரைக்கும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது
- ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு இலக்கியமாகவும் வரலாற்று ஆவணமாகவும் மதிக்கப் பெறுகிறது
- ஆனந்தரங்கர் சென்னை பெரம்பூரில் 1709 மார்ச் 30 ல் பிறந்தார் .
- ஆனந்தரங்கர் 3 வயதில் தாயை இழந்தார்
- ஆனந்தரங்கர் எம்பார் என்பாரிடம் கல்வி பயின்றார்
- ஆனந்தரங்கர் தந்தை திருவேங்கடம் மைத்துனர் நைனியப்பன்
- ஆனந்தரங்கர் புதுவையில் அரசுப் பணியில் சேர்ந்து திவானாக பதவி உயர்ந்தார். பாக்கு கிடங்கு நடத்தி வந்தார்.
- துய்ப்ளெக்சு எனும் ஆளுநரின் மொழி பெயர்ப்பாளர் ( துபாசி ) இறந்ததால் ஆனந்தரங்கர் அப்பதவிக்கு பணியமர்த்தப்பட்டார்.
- 1736 முதல் 1761 வரை 25 ஆண்டுகள் நாட்குறிப்பு எழுதி உள்ளார் . தனது நாட்குறிப்புக்கு தினப்படி செய்திக்குறிப்பு , சொஸ்தலிகிதம் எனப் பெயரிட்டார்.
- ஆனந்தரங்கர் நாட்குறிப்பு வரலாற்றுக் கருவூலமாக திகழ்கிறது
- ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் பெரும்பகுதி வாணிகச் செய்தி உள்ளது .
- நாட்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும் மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும் அவரவர் வளவிலே கலியாணம் நடப்பது போலவும் நீண்ட நாள் தவங் கிடந்து புத்திர பாக்கியம் கிடைத்தாற்போலவும் தேவாமிர்தத்தைச் சுவைத்தது



Siva 8015118094

போலவும் புதுச்சேரிக்கு கப்பல் வந்த செய்தியைக் கேட்டு மக்கள் மகிழ்ந்ததாக ஆனந்தரங்கர் குறிப்பிடுகிறார்

- ஆனந்தரங்கர் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இந்திய மன்னர்களுக்கும் இடையே பாலமாக இருந்தார்
- முசபர்சிங் 1749 ல் ஆனந்தரங்கருக்கு 3000 குதிரைகளை வழ்ங்கி மன்சுபேதார் எனும் பட்டத்தை வழங்கினார்.
- செங்கற்பட்டு கோட்டைக்கு தளபதியாகவும் மாவட்ட முழுமைக்கும் ஜாகீர்தாரர் ஆகவும் ஆனந்தரங்கர் நியமனம் பெற்றார் .
- துய்ப்ளே ஆட்சியில் ஆனந்தரங்கர் பல்லக்கில் செல்லும் உரிமை , தங்கப்பிடி போட்ட கைத்தடி வைத்துக்கொள்ள ஆளுநர் மாளிகைக்குள் செருப்பு அணிந்து செல்ல ,தீர்ப்பு வழங்க உரிமைப் பெற்றிருந்தார்
- ஆனந்தரங்கர் தமிழில் கையெழுத்திட்டார் .
- உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் முன்னோடி பெப்பிசு
- ஆனந்தரங்கர் இந்தியாவின் பெப்பிசு எனவும் நாட்குறிப்பின் வேந்தர் எனவும் போற்றப்படுகிறார்
- டைஸ் ( இலத்தீன் சொல்) – நாள்
- டைரியம்( இலத்தீன் சொல் ) – நாட்குறிப்பு( தமிழ் ) – டைரி ( ஆங்கிலம்)
- அருணாசலக் கவிராயர் ராம நாடகத்தை திருவரங்கத்தில் அரங்கேற்றிய பின் ஆனந்தரங்கருக்காக மீண்டும் ஒரு முறை அரங்கேற்றினார்
- ஆனந்தரங்கருடைய நாட்குறிப்புகள் அவரது காலத்தில் யாருமே புரிந்திராத அரியதோர் இலக்கியப்பணி – கே.கே பிள்ளை
- சித்திரக்குப்தனைப்போல் குறித்து வைத்துள்ளார் – வ.வே.சு
- ஆனந்தரங்கர் குறித்து வெளி வந்துள்ள இலக்கியங்கள்

ஆனந்தரங்கக் கோவை – தியாகராச தேசிகர்
ஆனந்தரங்கர் தனிப்பாடல்கள்
கள்வன் நொண்டிச் சிந்து
ஆனந்தரங்கர் பிள்ளைத்தமிழ்– அரிமதி தென்னகன்
ஆனந்தரங்கர் புதினங்கள்
ஆனந்தரங்கர் விஜயசம்பு – சீனிவாசக்கவி ( வட மொழி)
ஆனந்தரங்கர் ராட்சந்தம் – கஸ்தூரி ரங்கக்கவி ( தெலுங்கு)

Siva 8015118094